# ஸ்ரீ காஞ்சீ ஹஸ்திகிரி வைபவம்.

(ஸ்ரீ காஞ்சி ப்ர. அண்ணங்கராசார்யர்)

## முகவுரை.

நூற்றெட்டுத் திருப்பதிகளுள் "கோயில், திருமலை, பெருமாள்கோயில்" என்று இமவந்தம் தொடங்கி இருங்கடலளவும் சிறப்பித்துக் கூறப்படுகின்ற மூன்று திவ்ய தேசங்களுள் ஒன்றாய், "முத்திதரும் நகரேழில் முக்கியமாங்கச்சி" என்றும் "காசி முதலாகிய நன்னகரியெல்லாம் கார்மேனி யருளாளர் கச்சிக்கொவ்வா" என்றும் ஆசாரியர்களால் போரப் பொலியப் போற்றப்பட்டதான ஸ்ரீ காஞ்சி புரியில் பெருந்தேவி மணவாளனை பேரருளாளனுடைய ப்ராதுர்ப்பாவஸ்தலமாகிய ஸ்ரீ ஹஸ்திகிரியின் வைபவமும், அங்கு நான்முகன் அச்வமேதயாகஞ்செய்து ஸித்திபெற்ற பெருமையும், க்ருத த்ரேதா த்வாபர கலி யுகங்களில் முறையே, பிரமன் கஜேந்திராழ்வான் ப்ருஹஸ்பதி ஆதிசேஷன் என்னுமிவர்கள் திருவாராதனம் செய்யப்பெற்ற வரலாறுகளும் ஹஸ்திகிரி மாஹாத்மியம் என்று ஸுப்ரஸித்தமான புராண நூலில் பதினெட்டு அத்யாயங்களால் விரியவுரைக்கப்பட்டுள்ளன. அது, அஷ்டாதச புராணங்களுள் ஒன்றான ப்ராஹ்ம புராணத்திலடங்கியதாம்.

பேரருளாளப் பெருமாளுடைய திருவவதார பர்யந்தமான கதையை ஸ்ரீ வேதாந்த தேசிகர் இருபத்தெட்டு பாசுரங்கள் கொண்ட 'ஹஸ்திகிரி மாஹாத்மியம்' என்னும் தமிழ்ப் ப்ரபந்தத்திலும். அதற்குத் தாமே அருளிச்செய்த மிக்க சுருக்கமான வியாக்கியானத்திலும் வெளியிட்டருளினர்.

பிற்காலத்தவரான வேங்கடாத்வரி வரதாப்யுதயமென்று மறுபெயர் பூண்டதான 'ஹஸ்திகிரி சம்பூ' என்கிற ஒரு ஸம்ஸ்க்ருத சம்பூக்ரந்தத்தினால் புராணத்தில் கண்டகதைத் தொகுதி முழுவதையும் கத்ய பத்யங்களாக அமைத்துப்பேசியுள்ளார். மேற்குறித்த மூன் நூல்களையெல்லாம் தழுவி மிகவுமெளிய நடையில் வடமொழி வசனமாகக் காஞ்சீ ஹஸ்த்யத்ரி வைபவம் என்னும் நூலை எழுதி வெளியிட்டிருக்கின்றேன். தமிழறிஞர்கட்கு உதவியாகத் தமிழில் இது எழுதப்படுகின்றது. .... .... ....

---

## அவதாரிகை.

ஒருகால் நாரத மஹர்ஷியை நோக்கி ப்ருகு மஹர்ஷியானவர் "தொண்டை* நாட்டிலுள்ள ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தின் பெருமையையும், அங்கு ஸ்ரீ ஹஸ்திகிரி சிகரத்தில் தேவப்பெருமாள் திருவவதரித்த பெற்றியையும், காஞ்சிநகரத்தின் அதிசயங்களையும் உள்ளபடியே எமக்கு உரைத்தருளவேணும்" என வேண்டிக்கொள்ள; அதற்குத் திருவுள்ளமிரங்கிய நாரத முனிவர் அந்த ப்ருகு முனிவரை நோக்கி இங்ஙன முரைத்தார்;—"ஒருகால் நான் எம்பெருமானை ஸாக்ஷாத்கரிக்க விரும்பி அதற்குறுப்பாகமனத்தூய்மை பெறவேண்டி, கங்கை யமுனை ஸரஸ்வதி ஆகிய மூன்று புண்ய நதிகளும் கூடுமிடமாய்ப் பரம புனிதமான மேருமலையுச்சியிடத்து வீற்றிருக்கின்ற எனது தந்தையான நான்முகக்கடவுளை அணுகி அடிபணிந்து 'கண்ட விடமெங்கும் திரிந்தலைந்துழல்கின்ற நெஞ்சை அடக்கியாண்டு எம்பெருமானுடைய திருவடியிணையிலேயே பதியவைப்பதற்கு உரிய உபாயத்தை உரைத்தருள்க' என்று விண்ணப்பஞ் செய்தேன்; அப்போது அப்பிரமனார் வார்த்தையாடையில், தாம் ஸத்யவ்ரத க்ஷேத்திரம் சென்றதையும் அங்கு அச்வமேத யாகம்செய்து திருமாலை ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றதையும் பெருமகிழ்ச்சியோடு புகன்றார்; 'அந்த வரலாறுகளை விரியவுரைத்தருள வேணும்' என்று உடனே அடியேனால் வேண்டிக்கொள்ளப்பட்ட அந்த மலர்மிசைப் பெருமான் கருணையோடு எனக்குரைத்த கதையையே இப்போது உமக்கு நான் உரைக்கின்றேன்; கேளும்" என்றார்.

பிறகு கை கூப்பிக்கொண்டு பணிவுடன் செவிமடுத்த ப்ருகு மஹர்ஷிக்கு நாரத முனிவர் பணித்ததாய், காஞ்சி ஹஸ்திகிரியின் வைபவமும் ஸ்ரீவரதராஜனுடைய ஆவிர்ப்பாவமும் அப்பெருமானுடைய திருவாராதனப் பெருமைகளும் பொருந்தியதான கதா ஸந்தர்ப்பம் வருமாறு.

அவதாரிகை முற்றிற்று.

# கதைத் தொடக்கம்.

[பிரமன் ஆகாசவாணியைச் செவியுறுதல்.]

முன்பு, நான்முகக் கடவுள் திருமாலைக் காணவேண்டித் தவங்கள் புரிந்தனன். ஆயினும், எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளில் நிலை கொள்ளாமல் வெவ்வேறு விஷய இன்பங்களில் பதறியோடுகின்ற தனது நெஞ்சை அடக்கியாளமுடியாமல் வருத்தங்கொண்ட அந்த நான்முகன் இன்னது செய்வதென்று தெளியப்பெறாமல் திகைத்திருக்குமளவில் ஆகாயத்தில் நின்றும் ஒரு அசரீரி வாக்குத் தோன்றியது; அதாவது:—'பிரம! ஆயிரம் அச்வமேதங்களை அனுட்டித்தால்தான் சித்தசுத்தி பெற்றுத் திருமாலைக் கட்கூடாகக் காணப்பெறுவாய்; விரைவில் திருமாலைக் காணவேண்டி ஆயிரம் அச்வமேதயாகமனுட்டிக்கும் தாமதத்தைப் பொறுக்ககில்லாயாகில், தொண்டை நாட்டிலுள்ள ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திற்குச் சென்று அவ்விடத்தில் அயமேத வேள்வியியற்றி எம்பெருமானை உகப்பிப்பாயாக: அங்கு ஒரு கருமம் செய்தாலும் அஃது ஆயிரமுகமாகிப் பயன் பெறுவிக்கும்; இஃது அந்த க்ஷேத்ரத்திற்கு உற்ற பெருமை' என்று.

[பிரமன் ஸத்யவ்ரத க்ஷேத்திரமடைதலும் யாகசாலையமைக்க முயலுதலும்.]

மேற்கூறியவாறு தோன்றிய ஆகாயவாணியைக் கேட்டுப் பரமானந்தமடைந்த பிரமன் மேருமலையுச்சியில் நின்று உடனே எழுந்து ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்குவந்து சேர்ந்து அங்குத் தவ முனிவர் சூழ்ந்த திருவனந்த ஸரஸ்ஸையும் அதனருகில் திகழும் திருவத்திமாமலையையும் நோக்கியுவந்து அத்திருக்குளக்கரையிலேயே தூய வேள்விபுரியத் துணிவுகொண்டான்.

நினைத்தபோதே எதையும் அற்புதமாக நிருமித்துமுடிக்க வல்லவனான விச்வகர்மாவை யழைத்து, ஸ்ரீ ஹஸ்திகிரியை உத்தரவேதியாக்கி இவ்விடத்திலேயே யாகசாலையை அமைத்திடுவாயாக, மணிமாடங்கள் சூழ்ந்தழகாயதொரு நகரத்தையும் நிருமிப்பாயாக." என்று கட்டளையுமிட்டனன்.

இங்ஙனம் அயனது ஆணையைச் சிரமேற்கொண்ட விச்வகர்மா ஸ்ரீஹஸ்திகிரியை நாற்சதுரமாக்கி அதனருகில் அச்வமேத யாகசாலையை அமைத்துத் தடமாமதிள் சூழ்ந்தழகாய கச்சிப்பதியையும் விரைவில் நிருமித்தனன். பிறகு வேள்வியைக்காண விருப்பத்துடன் வந்து சேர்ந்த அந்தரத்தமரர்கள் கூட்டங்களும் இயக்கரும் விச்சாதரரும் கின்னரரும் கந்தருவரும் முதலாயினோர் தந்தமக்குரிய விடுதிகளில் சார்ந்தனர். இந்திரன் முதலிய தேவர்களாலும், விச்வாவஸு முதலிய கந்தருவர்களாலும், விரோசனன் முதலிய அசுரர்களாலும், மணிபத்ரன் முதலிய யக்ஷர்களாலும், வஸிஷ்டர் முதலிய மாமுனிகளாலும் அரம்பை முதலிய அப்ஸரஸ்ஸுக்களாலும், நகுஷன் முதலிய சக்ரவர்த்திகளாலும் மற்றும் பல்வகைப் பெரியார்களாலும் நெருக்கமுற்று விளங்கியது காஞ்சிமாநகர்.

[சீறிப் பிரிந்திருக்கின்ற ஸரஸ்வதியை வேள்விக்காக அழைத்து வருமாறு வஸிஷ்டரையனுப்புதல்.

பின்னர், யாகத்திற்கு வேண்டிய ஸம்பாரங்கள் சேகரிக்கப்பட்டு, ரித்விக்குக்களும் திரண்டனராக, வேள்விபுரிய ஸங்கல்பஞ் செய்து நின்ற விரிஞ்சனை நோக்கி ப்ருஹஸ்பதியானவர், 'திசைமுகனே! உனது தருமபத்தினியான ஸரஸ்வதியின்றியில் வேள்வி நடைபெறாதாகலாக

இவளை இங்கு அழைக்க முயல்வாய்' என்றனர். பிறகு பிரமன் வஸிஷ்டமுனிவனை நோக்கி 'முன்பொருகால் ஏதோவொரு காரணத்தினால் என்மீது கறுக்கொண்ட ஸரஸ்வதியானவள் ஸரஸ்வதீ நதியைச் சென்று சேர்ந்து அங்குத் தவம்புரிந்துகொண்டிராநின்றாள்; அவளை நீ இப்போது நல்வார்த்தைகளினாலுகப்பித்து இங்கழைத்துவரவேணும்' என்றனன்.

அக்கட்டளையைச் சிரமேற் கொண்ட வஸிஷ்டமாமுனிவன் ஸரஸ்வதீ தீரத்திற்கு விரைந்து சென்று வாணியை வணங்கித் துதித்து, தாயே! காஞ்சிமாநகரில் அச்வமேத வேள்வியியற்ற விரும்பிய அம்புயத்தோன் உமது நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றாராதலால் அவண் விரைந்து எழுந்தருளவேணும்; ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தில் அந்த வேள்வியை நீர் குறையற நிறைவேற்றி யருளவேணும்' என்று கைகூப்பிக் கூறினன்.

இது கேட்டதும் மிக்க சினங்கொண்ட ஸரஸ்வதியானவள் உதடு துடிக்க இங்ஙனம் உரைத்தனள்;—'பிள்ளாய்! என்மீது மிக்க பகைமை கொண்ட எனது கணவர் பெரியதொரு ஸபையில் என்னைப் பண்டு பரிபவப்படுத்தினபடியை நினைத்துக்கொண்டால் அவரருகில் வந்துசேர எனக்கு மனமுண்டாகுமோ? என்னை அவர் பரிபவப்படுத்தினபடியாதென்று உணர விரும்புவாயாகில் உரைக்கின்றேன் கேள்; முன்பொருகால், லக்ஷ்மீ பக்தர்களும் என்பக்தர்களும் பரஸ்பரம் ஒரு விவாதமடைந்தார்கள்; லக்ஷ்மியே மிகச்சிறந்தவளென்று லக்ஷ்மீ பக்தர்களும், நானேமிகச் சிறந்தவளென்று என் பக்தர்களும் சொல்லி விவாதப்பட்டார்கள்; பிறகு இரு வகுப்பினரும் பல முனிவர்புடைசூழ்ந்த நான்முகக் கடவுளின் ஸபைக்குச்சென்று தத்தம் வாதங்களை விரிவாக வெளியிட்டுக் கொண்டனர்; அப்போது சதுமுகனார் தாமாகவே பிராட்டியின் பெருமையையே ஸித்தாந்தமாக அறுதியிட்டுக் கூறினர். பிறகு நான் "என்னிலும் பிராட்டியே சிறந்தவளாயிடுக; ஸகல நதிகளுக்குள்ளுமாவது நான் சிறப்புடையளாம்படி அருள்புரிய வேணும்" என்று நாதரை வணங்கி வேண்டிக்கொண்டேன்; "*கங்கை கங்கையென்ற வாசகத்தாலேகடுவினை களைந்திடகிற்கும் கங்கை ஒப்புயர்வற்று விளங்கும்போது நதிகளுக்குள்ளும் உனக்குச் சிறப்பு ஏலாது; இங்ஙனம் நீ ஆசைப்படுவதும் அபஹாஸிக்கத்தக்கதாகும்" என்று பல்லாயிரவர் திரண்ட பெருஞ்சபையின்கண் மிகவும் திரஸ்காரமாக மொழிந்தார்; அவர் அங்ஙனம் அவமதித்ததனால் அளவு கடந்த சீற்றமுற்ற நான் அன்றே புறப்பட்டு இங்கு எனது அம்சமாகிய ஸரஸ்வதீ நதியைச் சார்ந்து வாழ்ந்துகொண்டிராநின்றேன்: வேள்விபுரிய விரும்பிய கணவர் என்னோடு கூடியே வேள்வி நடத்த விரும்பியிருப்பாராயின், அவர் தாமே பரம பவித்திரமான இவ்விடத்தேற எழுந்தருளி இங்கே வேள்வி நடத்தலாம்'—என்று.

இது கேட்ட வஸிஷ்ட முனிவர் 'தாயே! ஸரஸ்வதி! எல்லாமறிந்த நீர் இங்ஙனம் இயம்பலாகுமோ? ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தின் பெருமை ஸகலலோக ப்ரஸித்தமானது; அன்றியும் ஆகாயவாணியை ஆதரித்து அந்த க்ஷேத்ரந் தன்னிலேயே வேள்வியியற்ற நிச்சயித்த அப்பெரியாரை இவ்விடத்திற்கு வரச்சொல்லுதல் உசிதமாகுமோ? நீர்தாமே சினம் தணிந்து அவ்விடமெழுந்தருள்வது மிகநன்று' என்று வணங்கி விண்ணப்பம் செய்தனர்.

அவ்வளவினும் சிறிதும் சீற்றந் தணியப்பெறாத ஸரஸ்வதி பழைய பகைமையையே பெரிதும் பாராட்டி அவ்வேண்டுகோளை மறுத்தே விட்டனள். எவ்வளவு வேண்டியும் விருப்பம் நிறைவேறப்பெறாமலே வஸிஷ்டர் மீண்டுவந்து நான்முகனிடம் செய்தியறிவித்தனர்.

[ஸரஸ்வதியின்றியில் மற்றை மனைவியருடன் வேள்வியியற்றத் தொடங்குதலும், அசுரர்கள் வேள்வியைக் கெடுக்க முயலுதலும்.]

வஸிஷ்டர் வந்து தெரிவித்ததை யுணர்ந்த ஸகல மஹர்ஷிகளும் நான்முகக் கடவுளை நோக்கி, 'தேவ! சிற்றத்தின் எல்லையிலே நிற்கின்ற ஸரஸ்வதி இவண் வரப்போகிறதில்லையென்பதறிந்தோம்; அதனால் ஒரு குறையுமில்லை; ஸாவித்ரீ முதலிய மற்றை மனைவியரை உடன்கொண்டு வேள்வி தொடங்கி முடிப்பது நலம்' என்றனர். அங்ஙனமே செய்வதாக இசைந்த திசைமுகனார் ஸாவித்ரீ முதலிய மனைவியருடன் கூடி யஜ்ஞஸங்கல்பஞ் செய்துகொண்டு அச்வமேத தீக்ஷையை வஹித்துக்கொண்டார். வேள்வியதிசயங்களைக்காணவந்து குழுமியிருக்கின்ற தேவாஸுரர் முதலிய அனைவர்க்கும் தக்கவாறு மரியாதைசெய்ய அந்தணர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் அவ்வண்ணமே ஸத்காரம் செய்ய எழுந்து தகுதிநோக்கித் தேவர்களுக்கு முதல் மரியாதை செய்தனர். அதுகண்டு பொறாமை கொண்ட அசுரர்கள் உடனே ஸதஸ்ஸில் நின்று எழுந்து வெளியேறி, அமரர்களை அவமதிக்கவெண்ணி அமர்புரிய ஆலோசிக்கலாயினர்.

போர்புரிவதே பொருத்தமானதென்று துணிந்த அவ்வசுரர்களை நோக்கி அவர்களில் ஒருவனான விரோசனனென்பான் சிறிது விமர்சித்து இங்ஙனம் விளம்பினான்; "அசுரர்காள்! மேல்விளைவதறியாமல் நீங்கள் சடக்கெனச் செய்யத்துணிந்த இந்த யுத்த ஸந்நாஹத்தை நிறுத்திக்கொள்வது நன்று; விரைந்து விளக்கிலே விழும் விட்டில்களுக்கு நேரும் கதிதான் நமக்கும் நேரும்; பிறருடையவும் நம்முடையவும் பலாபலங்களை ஆராயாது திடீரென்று போர்புரியப் புகுவது பெருந்தீங்காகவே முடியும்; எளிய உபாயத்தினால் ஸாதிக்கத் தகுந்ததைப் பராக்ரமத்தினால் ஸாதித்துக்கொள்ளக் கருதுவது புத்திமான்களின் பணியல்ல; இப்போது எனக்குத் தோன்றுவதொரு உபாயத்தை உரைக்கின்றேன் கேண்மின்; இந்த நான்முகக்கடவுள் தனது மூத்த மனைவியாகிய ஸரஸ்வதியைத் துறந்து வேள்வியியற்றத் தொடங்கியிருக்கின்றமையால் நாம் ஸரஸ்வதியிடம் சென்று சினமூட்டி அவளைக்கொண்டு வேள்வியைக் கெடுத்தல் மிக எளிதாகும்"—என்று.

விரோசனன் இங்ஙனம் விளம்பக்கேட்ட அசுரர்களனைவரும் நன்று நன்றென்று நவின்று அப்பொழுதே புறப்பட்டு ஸரஸ்வதி பக்கலிற் சென்று, தங்களுக்குள்ள மாயச்செயல் வல்லமையினால் அசுரவுடல் நீத்து அந்தணவேடம் பூண்டு வாணியை வாயாரவாழ்த்தி நின்றனர். அவ்வாழ்த்துதலால் அகமகிழ்ந்த அவள், நீங்கள் வந்த காரியமென்னென்று வினவ, தங்களுக்கு ஸதஸ்ஸில் அவமரியாதை நடந்ததென்பதைச் சிறிதும் வெளியிடாமலே இங்ஙனம் மொழிந்தனர்;—"பெண்மைதங்கிய கலைமகளே! தீய மதி கொண்ட சிலமுனிவர்களால் தூண்டப்பட்ட உமது கணவன் முக்கிய மஹிஷியான உம்மைத் தவிர்த்து மற்றை மஹிஷிகளோடு கூடி யாகம் செய்யத் தொடங்கியிருக்கின்றனன்; மிகவும் அநீதியான இந்தச்செய்தியை நாங்கள் பொறுக்கவில்லோம்; இதனை உம்மிடத்து விண்ணப்பஞ் செய்யவே வந்தோம்; எவ்வகையினாலாவது அந்த வேள்வி நடைபெறாத வண்ணம் தடை செய்தீராகில் உம்மிடத்து அன்புபூண்ட எமக்கு மகிழ்ச்சியாகும்"—என்று.

[சதுமுகனார் வேள்விதனைச் சதிர்கெடுக்க வேகவதீப்ரவாஹம் வெள்ளங்கோத்து வருதல்.]

இங்ஙனம் அசுரர் மொழியக்கேட்ட ஸரஸ்வதி அடக்கவொண்ணாத சீற்றத்தையேறிட்டுக்கொண்டு, நான்முகனார் செய்யும் நல்வேள்வியைப் பங்கம் செய்யப்பாரித்து,

ஸஹ்யமலையினின்று கிளம்பி வேகவதியென்னும் நதியாகப்பெருகி ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்தனள்: அந்த நதியின் பெருக்கு வாசாமகோசரமாக இருந்தது. மிகவும் பயங்கரமான விசையுடனே பெருகிவருகின்ற அப்பெருவெள்ளத்தைக்கண்ட யாகசாலையிலுள்ளாரனைவரும் திடுக்கிட்டு இன்னது செய்வதென்று தோன்றாமல் மிகவும் வியாகுலப்பட்டனர். 'ஸ்வாஹா ஸ்வாஹா' என்று சொல்லிக்கொண்டிருந்த வாசகங்கள் 'ஹா ஹா ஹா ஹா' என்று மாறிவிட்டன.

[திருவெஃகணை, ஸ்ரீயதோக்தகாரியெம்பெருமான் ஆவிர்ப்பவித்தல்]

வேள்வி காணவந்த ஸகல ஜனங்களும் வருந்தியேங்கி யஜமானனுகிய நான்முகனைத் தஞ்சமாக அடைந்து 'எம்மைக் காத்தருளவேணும், எம்மைக் காத்தருளவேணும்' என வேண்டிக்கொண்டவளவிலே, பிரமன் யோகத்ருஷ்டியினல் 'அசுரர்களால் கலக்குண்ட ஸரஸ்வதியின் செயல் இது' என்றுணர்ந்து, ஸ்ரீமந்நாராயணனது திருவருளாலேயே இப்பெருந்துயரம் தொலையவேணுமென்று துணிந்து உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து உடம்பெலாம் கண்ணநீர்சோர அப்பெருமானைக் குறித்து வாயாரத் தோத்திரஞ் செய்தனன். அந்தத் தோத்திரத்தினல் மிகவும் திருவுள்ளமுவந்த எம்பெருமான், ஏற்கெனவே உபநிஷத்துக்கள் தன்னை ஸேதுவாக ஓதியிருப்பது பொருள்பெற்றதாம்படி, "சதுமுகனர் வேள்வி தனைச் சதிர்கெடுக்கச் செறிந்தோடுங்கதியுடைய வேகவதிக்கணையாக வந்துதித்தோய்!" என்றும், "அணியாக வேகவதி அலையோடு கொண்டோடி ஆலிக்க அணையாக் கிடந்தகளைதானே" என்றும் பின்னுனர் ஏத்துமாறு அந்த ஸரஸ்வதியின் வெள்ளத்தைத் தடைசெய்யவல்ல அணையாக சயனித்துக்கொண்டருளினன். அந்தத் திருப்பள்ளித் திருக்கோலத்தைக் கண்ட ஸரஸ்வதி நாணமுற்று மேலே பெருகிச் செல்லமாட்டாமல் திகைத்துநின்றனள். மலர்மைந்தனும் மற்றுமுள்ள மஹர்ஷிகளும் எம்பெருமானுடைய திருவருளை நோக்கி மிக வியந்து வாயார வாழ்த்திவணங்கி நின்றனர். நதியுருவாக வந்த ஸரஸ்வதியும் அவ்வளவிலே தனது ஆர்ப்பாட்டங்களெல்லாம் அடங்கப்பெற்று எம்பெருமானுடைய நியமனத்தினல் அந்தர்வாஹினியாய்ச் சென்று கடல் சேரலுற்றாள்.

யதோக்தகாரியென்று திருநாமம்பூண்ட அப்பெருமானது தென்புறமாகச் செல்லலுற்ற வேகவதியை வஸிஷ்டர் முதலிய முனிவர்கள் பிரமனது சொற்படி வந்து வணங்கி, தாயே! ஸரஸ்வதியே! யாகசாலையில் இனியாகிலும் வந்து சேர்ந்து நாதரோடு கூடிக் களித்திருந்து இப்பெருவேள்வியை நிறைவேற்றியருளவேணும்; எல்லா நதிகளிற்காட்டிலும் உன்றனக்கே மிக்க சிறப்பு உள்ளதாக நான்முகக்கடவுள் அநுக்ரஹம் செய்கின்றார்" என்று சொல்லி வேண்டிக்கொள்ள, அவளும் மிக்க மன மகிழ்ச்சியுடனே நதியில் நின்றும் விரைந்தெழுந்து நான்முகக் கடவுளோடு சேரலுற்றாள்.

[வேள்வியில் ஹவிஸ்ஸு கிடைக்கப்பெறாத தேவர்கள் வருந்துதல்]

அச்வமேத யாகத்திற்கு உண்டான இடையூறு எம்பெருமானது இன்னருளால் தொலைந்து ஸரஸ்வதியும் வந்துசேர்ந்து ஒருகுறையுமின்றி வேள்வி நடைபெறுவதாயிற்று. அக்னியில் ஆஹுதி செய்யப்பட்ட ஹவிஸ்ஸு முழுவதையும் நான்முகன் எம்பெருமானைச் சிந்தை செய்துகொண்டு அப்பெருமானுக்கே நேரில் ஸமர்ப்பித்தனன்; அதனல் பல பல தேவதைகள் யாகசாலைக்கு நேரில் வந்திருந்த போதிலும், "ஸோமாய ஸ்வாஹா, வருணாய ஸ்வாஹா; இந்த்ராய ஸ்வாஹா, ஸூர்யாய ஸ்வாஹா" என்றப்படி அந்தந்த தேவதைகளை

உத்தேச்யர்களாகக் கொண்டு ஹோமம் செய்யப்பட்டபோதிலும், ஒரு ஹவிஸ்ஸும் ஒரு தேவதைக்கும் கிடைக்காமற்போயிற்று. அங்ஙனம் கிடைக்காமற்போனதனால் மிக்க வருத்தங்கொண்ட அத்தேவதைகள் நான்முகனை நோக்கித் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்து 'இப்படியும் எம்மை அவமானப் படுத்துவது தகுதியோ பிரம!' என்று முறையிட்டுக் கொண்டார்கள்.

[தேவர்களுக்குப் பிரமன் தத்துவமுணர்த்தல்]

தத்தமக்கு ஹவிஸ்ஸு கிடைக்காமை பற்றி வருத்தங்காட்டி முறையிட்டுக்கொண்ட அமரர்களை நோக்கி அயன் இங்ஙனமுரைத்தனன்:— 'தேவர்காள்! ஆயுள், ஆரோக்யம், மக்கள், செல்வம் முதலிய அற்ப பலன்களைக் குறித்து வேள்வி புரிகின்றவர்கள் யாவரோ, அவர்களே உங்களைக் குறித்து யஜிப்பவர்கள்; அன்னவர்களால் ஆஹுதி செய்யப்படும் ஹவிஸ்ஸுகளே உங்களுக்குக் கிடைக்கக் கூடியவை; முமுக்ஷுக்களான பரமைகாந்திகளால் ஸ்ரீமந்நாராயணனே ஸாக்ஷாத்தாக யஜிக்கப்படுகிறபடியால், அன்னவர்களால் அர்ப்பணம் செய்யப்படும் ஹவிஸ்ஸுக்களை ஸாக்ஷாத் பரமபுருஷன் தானே ஸ்வீகரித்தருள்வான்; இப்போது அடியேன் முமுக்ஷுவாய்ப் புண்டரீகாக்ஷனையே ஸாக்ஷாத்கரிக்கவெண்ணி யாகஞ் செய்கிறேனென்பதை நீங்களனைவருமறிவீர்; இந்த வேள்வியில் ஹோமம் செய்யப்படும் அவியுணவுகளை அமரர் பெருமான்தானே ஸாக்ஷாத்தாக அங்கீகரித்தருள்கின்றமையால் நீங்கள் இவ்வுணவுகளைப் பெற ஆசைகொள்ள அவகாசமில்லை' என்று.

[புண்யகோடி விமானம் தோன்றுதல்.]

இங்ஙனம் பிரமன் உபதேசித்த தத்துவப் பொருளைச் செவியேற்று அமரர்கள் அஹங்காரமொழிந்து சீற்றமும் தணியப்பெற்றனர். நிபுணரான வஸிஷ்டர் வேள்விச்சடங்குகளைக் குறையொன்றுமின்றியே அடைவுபட நடைபெறுத்திப் போந்தனர். ப்ராப்தமான காலத்தில் வேள்விக் குதிரையின் வபையை யெடுத்து அக்நியில் ஹோமம் செய்தவளவில் மங்கல வாத்தியங்கள் முழங்காநிற்க, வேதகோஷம் விம்மி வளராநிற்க, விண்ணுலகில் நின்றும் பூமாரி சொரியாநிற்கப் பரம பவித்திரமான புண்யகோடி விமானம் அக்நி மத்தியில் நின்றும் தோன்றியது.

[தேவப்பெருமாள் திருவவதரித்தல்.]

அந்தப்புண்யகோடி விமானத்தினுள்ளே * உலகேத்துமாழியானத்தியூரான் * என்றும், * வரந்தரும் மாமணிவண்ணன் * என்றும் ஆழ்வார்களால் போற்றப்பட்ட பேருளாளப் பெருமாளென்னும் ஸ்ரீ வரதராஜன் *கோலமாமணியாரமும் முத்துத் தாமமும் முடிவில்லதோரெழில் நீலமேனியனாய் * மின்னுநூலும் குண்டலமும் மார்வில் திருமறுவும் மன்னுபூணும் நான்கு தோளுமுடையனாய் * சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவாயொன்றினோடுங் கூடினவனாய் * பூந்தண்மாலைத் தண்டுழாயும் பொன்முடியும் வடிவும் பாங்கு தோன்றும் பட்டும் நாணுமாய் * தொக்கசோதித் தொண்டைவாயும் நீண்ட புருவங்களும் தக்கதாமரைக் கண்களுமாய் * சூழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருருவென்னலாம்படி நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த நீண்ட பொன்மேனியோடே* தோளிணை மேலும் நன்மார்பின்மேலும் சுடர் முடிமேலும் தாளிணைமேலும் புனைந்ததண்ணந்துழாய் மாலையனாய்க் காட்சி தந்தருள, அந்த ஸேவையை நான்முகனுள்ளிட்டாரடங்கலும் கண்டு ஆனந்தமென்னும் அமுதக் கடலில் ஆழ மூழ்கினர். பிரமன் நெடு நாளாகத் தான் பட்ட பரிச்ரமம் பயன் பெற்றதற்குப் பேரவுகந்து, ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து கூப்பிய கையனாய்,

" தேவராய்த் தேவர்க்கும் தெரியாதவொளியுருவாய்
மூவராய் மூவர்க்குள் முதல்வனாய் நின்றோய் நீ ;
போற்றுவார் போற்றுவதுன் புகழ்ப் பொருளேயாதலினுன்
வேற்றுவாசகமடியேன் விளப்பு மாறறியேனால்;
பணித்தடங்காதிமையவர்க்கும் பலபல நன்முனிவர்க்கும்
பணித்தடங்காப் புகழடியேன் பணித்தடங்கற்பாலதோ,
யாங்கடவுளென்றிருக்குமெவ்வுலகிற் கடவுளர்க்கும்
ஆங்கடவுள் நீ யென்றால் அஃதுனக்கு வியப்பாமோ?
கருதரியவுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையும்
ஒரு தனி நாயகமென்றாலுன் பெருமைக்களவாமோ?
அனைத்துலகுமனைத்துயிருமமைத்தளித்துத் துடைப்பது நீ
நினைத்த விளையாட்டென்றால் நின் பெருமைக்களவாமோ?"

என்றிங்ஙனே பலவாறாகத் துதித்து வேரற்ற மரம் போலே பெருமானது திருவடிவாரத்திலே விழுந்து கிடக்க, பேரருளாளன் பேரருள் பொலியும் புன்முறுவல் செய்து இங்ஙனே அருளிச்செய்தான்;—" பிள்ளாய்! பிரமனே! எழுந்திருப்பாயாக; உனது திருவாராதனங்களுக்கு நான் மிகவும் உவந்தேன் ; உனக்குப் பலவகை நன்மைகளுமுண்டாகுக : உனக்கு விருப்பமான வரத்தை வேண்டிக்கொள்வாயாக." என்று.

அது கேட்ட சதுமுகன் எழுந்து " பரமபுருஷ! பலன்களெல்லாவற்றினும் மேம்பட்டுப் பரமபலனாயிருக்கின்ற உன்றன்னைப் பரம பாக்கியத்தினால் கண்குளிரக் காணப்பெற்ற அடியேனுக்குக் கை புகாத பலன் ஒன்றுண்டோ? அவாப்தஸமஸ்தகாமன் அடியேனேயாகின்றேன்; விரும்பிப் பெறவேண்டியதொன்றில்லை : அடியேன் மீது பேரருள் பொலியுமாகில் இவ்வத்திமாமலையின் உச்சியின் மீதே நித்திய ஸந்நிதி பண்ணியருளி "வன் பெருவானகமுய்யவமருய்ய மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச்சுகம் வளர அகமகிழும் தொண்டர் வாழ நீடூழிகாலம் எழுந்தருளியிருக்கவேணுமென்று இவ்வளவே வேண்டிக்கொள்வதை நிறைவேற்றியருள வேணும்" என்று விண்ணப்பம் செய்தனன். பேரருளாளனும் அங்ஙனமே திருவுள்ளமுவந்து இசைந்தருளினன்.

[வேள்வி முடிவும் அவரவர்கள் தத்தம் இருப்பிடம் மீளுதலும்]

தனது வேண்டுகோளைப் பரம கிருபையுடன் பரிபூர்த்தி செய்தருளிய பேரருளாளனது பரிபூர்ண அநுக்ரஹத்திற்குப் பாத்ரபூதனான பங்கயத்தோன் பரமானந்தம் பூரிக்கப்பெற்று, வேள்வி முற்றுப்பெற்றதற் குறுப்பான அவபிரதஸ்நானத்தை அனந்த ஸரஸ்ஸில் செய்து தக்ஷிணைகளும் கொடுத்து அவரவர்களைத் தத்தம் இருப்பிடங்கள்சென்று சேருமாறு பஹுமானத்தோடு விடை தந்து அனுப்பினன். தேவேந்திரன் அமரர்களோடும் அப்ஸரஸ்ஸுக்களோடும் வித்யாதரர் முதலானோரோடுங் கூடி ஸ்வர்க்க லோகத்திற்குச் சென்றனன். வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளும் தம் தம் ஆச்ரமங்களை நோக்கி நடந்தனர். சக்ரவர்த்திகளும் தம் தம் நகர் நோக்கிச் சென்றனர். நித்ய ஸூரிகளும் முக்தர்களும் மாத்திரமே பேரருளாளனுடைய அத்தாணிச் சேவகத்தில் ப்ரேமம் நிரம்பினவர்களாய் இவ்வுலகத்தாருடைய கண்ணுக்குப் புலப்படாமே அங்கு வாழ்ந்து வந்தனர்.

[க்ருத யுகத்தின் முடிவில் தன்னுலகம் செல்லுமாறு நான்முகனுக்கு விடை தருதல்.]

க்ருதயுகம் முடியுமளவும் மிக்க மகிழ்ச்சியுடன் திவ்யோபசாரங்கள் செய்து தன்னை ஆராதித்து வருகின்ற அப்புயத்தோனை நோக்கி அத்திகிரிநாதன் அன்பு ததும்ப அருளிச் செய்யலாயினன் "பிரம! உனது அத்தாணிச் சேவகத்தினால் அகமகிழ்கின்றனன்; வேண்டிய வரத்தைப் பெற்றுக்கொண்டு உனது உலகத்திற்குச் சென்று சேர்வாயாக" என்று. இங்ங னம் நியமிக்கப்பெற்ற நான்முகன் இவ்விடத்திலேயே நித்யகைங்கரியம் செய்துகொண்( வாழ்வது தவிர வேறொன்றிலும் விருப்பமில்லாமையையும் பிரியில் தரியாமையையும் தெரி வித்து 'இங்குத் திருவடிவாரத்திலேயே அடியேனுக்கு நித்யவாஸ நியமநம் தந்தருளவேணும்' என்று பிரார்த்திக்க.

"பிரமனே! அநுஜ்ஞா கைங்கரியத்திற் காட்டிலும் ஆஜ்ஞா கைங்கரியமே மிகச் சிறந்ததென்பதை நீ அறிவாயன்றோ. ஸத்ய லோகத்தை நிர்வஹிக்க வேண்டிய கடமையில் நீ நியமிக்கப்பட்டிருக்கின்றாயாதலால், அந்த ஆஜ்ஞா கைங்கரியத்தைத் துறந்து இங்கு என்னருகே வாழ்ந்திருக்க விரும்புவது உரியதன்று. ஆகவே, நெடுநாளாக உன்னை விட்டுப் பிரிந்து துடிக்கின்ற உன்னுலகத்தவர்களை மகிழ்விக்க வேண்டி நீ அவ்விடமே சென்று சேர்ந்து என்னைச் சிந்தை செய்துகொண்டே ஆஜ்ஞாகைங்கரியங்களை நிர்வஹிப்பாயாக: என்னை விட்டுப் பிரிந்ததாக வெண்ணி நீ துயருறவும் வேண்டா; உனது நின்மலமான நினை விலே நிரந்தரம் நான் இருக்கின்றேனன்றோ? அன்றியும் இன்னமுமொன்று கேள்; முதல் யுகமான க்ருத யுகத்தில் நீ திருவாராதனம் செய்ததுபோல இரண்டாவதான த்ரேதாயுகத் தில் கஜேந்திரனும், மூன்றாவதான த்வாபர யுகத்தில் ப்ருஹஸ்பதியும், நான்காவதான கலி யுகத்தில் ஆதிசேஷனும் திருவாராதனம் ஸமர்ப்பிப்பார்கள்; ஆனால், எந்நாளிலும் ஆண்டு தோறும் சித்திரை மாஸத்தில் சுக்ல சதுர்த்தசி யன்று நீ இவ்விடம் வந்துசேர்ந்து பௌர்ணமி யன்று நியமேந எனக்குத் திருவாராதனம் ஸமர்ப்பிக்கக் கடவை." என்று நான்முகனுக்குப் பேரருளாளன் நியமன மளித்தனன். அந்த நியமனத்தைச் சிரமேற் கொண்ட விரிஞ்சன் வரதராஜனை வணங்கி வாழ்த்தி இத்திசை நோக்கி அஞ்சலி செய்து கொண்டே ஸத்யலோகம் சென்று சேர்ந்தனன். காஞ்சி நகரமும் நாளடைவில் காடு போலாயிற்று.

[த்ரேதாயுகத்தில் திருவாராதனம் செய்பவரான கஜேந்திராழ்வானது சரிதை.]

கீழ்க் கூறியவண்ணமான க்ருதயுகக்கதையை நாரத முனிவர் பக்கல் கேட்ட ப்ருகு முனிவர், 'அடுத்த த்ரேதாயுகத்தில் பேரருளாளப் பெருமானை ஆராதிக்கும் பாக்கியத்தை ஸ்ரீகஜேந்திராழ்வான் பெற்றது எங்ஙனம்?' என்று வினவி, அந்த வரலாற்றையும் அம்முனி வர் வாயில் செவியுற்றனர்; அது வருமாறு:

முற்காலத்தில் ஞானமனுஷ்டானமிவை நன்றாகவேயுடையரான மஹாசாந்தரென்னும் ஒரு முனிவரர் இருந்தனர். இவர் ஒருகால் எம்பெருமானைக் குறித்து அருந்தவம் புரிய வெண்ணி மாமுனிவரது திரள் மலிந்த த்ரிகூடமலையுச்சியிற் சென்று சேர்ந்து கொடியதோர் தவம் புரியத் தொடங்கினர். அந்தத் தவ வலிமையைக் கண்ட தேவேந்திரன் தனது பதவி க்குக் கேடு விளையுமோவென அஞ்சி, எவ்வகையினாலாவது இத்தவத்திற்கு இடையூறு விளைக்கவேணுமென்று துணிந்து தேவமாதர்களனைவரையும் ஏவியனுப்பினன். அம்மடந் தையரனைவரும் த்ரிகூடமலையுச்சிதனில் மஹாசாந்த முனிவன் பக்கலில் வந்துசேர்ந்து பலவகையான சிங்கார சேஷ்டைகளைச் செய்தனர்; ஆடல் பாடல் முதலிய அழகிய விலாஸங்களை அளவறப் பண்ணினர்.

இங்ஙனம் அமரமங்கையர் எவ்வளவு விலாஸங்களை இயற்றிய வளவிலும் மஹா சாந்த முனிவரது மனம் சிறிதும் கலக்கமுறாமலே எம்பெருமானுடைய திருவடியிணையை விட்டு அகலாதிருந்தது. அரம்பையானவள் அஹங்காரமற்றொழிந்தாள்; உருப்பசியானவள் உறக்கங் கொண்டனள்; பூர்வசித்தியென்பாள் புன்மையெய்தி யொழிந்தாள்; இங்ஙனம் ஒவ்வொருத்தியும் செருக்கடங்கி வந்த வழியே மீண்டேகினர்.

மஹாசாந்த முனிவருடைய தவவுறுதி அசைக்கவுமொண்ணாததென்பதை அமரர் தலைவன் அம்மடந்தையர்பால் கேட்டறிந்த பின்பும், தானே நேரில் வந்து மாயையினால் அம்முனிவரை மோஹிப்பிக்க விரும்பி அழகியதோர் யானைவடிவமெடுத்துப் பல பிடிக ளுடன் [பேடைகளுடன்] விளையாடாநின்று அம்முனிவரது ஆச்ரமத்தருகே வந்து அவர் கண்ணெதிரே அங்கு மிங்கும் உலாவிக்கொண்டிருந்தனன்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் அம்முனிவர், தம்மெதிரே பிடிகளுடன் விளையாடும் களிற்றினைக் கண்டு மனவிகாரமுற்றுத் தாமும் களிறாகிக் கிரீடை செய்ய விருப்பங்கொண் டார். யோகம் கைவந்தவராகையாலே அப்போதே களிறாகவுமாயினர். காமத்தின் வயப் பட்ட அக்களிறரசு விஷய போகங்களிலே பரந்து சென்றது. பிடிகளுடன் விளையாடிக் கொண்டே பல தலங்களுஞ் சென்ற கஜராஜன் ஒருநாள் சாளக்கிராமத்தினருகே செல் லுகையில் அங்கு சக்கர நதியில் குடைந்தாடப் பெற்றதனால் முற்பிறவியை நினைக்கு மாற்றல் பெற்றனன். முன் பரமபுருஷனைப் பூஜிப்பதில் தனக்கு இருந்த ஊற்ற மிகுதி யையும் விஷயாந்தர விரக்தியையும் நினைத்து நினைத்து அப்போதைய நிலைமைக்கு மிகவும் மனம் நொந்து, பண்டு போலவே பரம புருஷ பூஜையிலேயே அளவு கடந்த ஆஸக்தி பெற் றுத் தூயநன்மலர்களால் தூமணிவண்ணனை நிரந்தரமாக ஆராதித்து வருவதையே பொழுது போக்காகக்கொண்டது.

[கஜராஜன் காஞ்சீ ஹஸ்திகிரி வைபவத்தைச் செவியுறுதல்.]

ஆங்காங்கு புண்ய ஸ்தலங்களில் புராண புருஷனைப் புஷ்பங்களினால் பூஜித்துக் கொண்டே வருகின்ற புனித கஜராஜன் கோதாவரீ நதி தீரத்தில் வந்துகொண்டிருக்கையில் பரம பவித்திரமான ஒரு மஹர்ஷியின் ஆச்ரமத்தினுள்ளே புகுந்து அவ்விடத்தில் ஒப்புயர் வற்ற வைபவம் வாய்ந்து விளங்கும் ம்ருகண்டு வென்னும் மாமுனிவரைக் காணப்பெற்றுப் பெருமகிழ்ச்சிகொண்டனன். அவ்விடத்திலேயே சிலகாலம் வஸிக்கும்படியான பாக்கிய மும் நேர்ந்தது. முற்பிறவிகளின் சரிதைகளையும் கண்டறிந்து கூறவல்லவரான அம்முனி வரை ஒரு நாள் கஜராஜன் பணிந்து "ஸ்வாமின்! இவ்வுலகில் மிக்க பெருமை வாய்ந்தமலைகள் எவை? புண்ணிய நகரங்கள் எவை?" என்று கேட்க; அதற்கு அம்முனிவர் இங்ஙனம் விடையிறுத்தார்; "கஜராஜனே! அயோத்யை, மதுரை, மாயை, காசி, காஞ்சீ, உஜ்ஜயினீ, த்வாரவதீ என்பன ஏழு புண்ய புரிகள்; மந்தரம், ரைவதம், ஸிம்ஹம், மஹேந்த்ரம், கந்தமா தனம், ஹிமவான், ஹஸ்திசைலம் என்பன ஏழு பர்வதங்களான பருவதங்கள். புரிகளுக் குள்ளே காஞ்சீபுரியும், மலைகளுக்குள்ளே ஹஸ்திகிரியும் மிக்க சிறப்புறுவன. அந்த ஹஸ்தி கிரியின் உச்சியில் தேவராஜப்பெருமாள் அயமேத வேள்வியில் அயனுக்கு அருள் புரிந்து ஆவிர்ப்பவித்து அணிவிளக்காக விளங்கா நின்றார்; அப்பெருமானது திருவடிவாரத்திலே யிருந்து தொண்டுபூண்டமுதமுண்ண உமக்குத் திருவுள்ளமாயின் அங்ஙனம் செய்க—என்று

[கஜராஜன் முதலைவாய்க் கோட்பட்டு வருந்துதல்.]

ம்ருகண்டு மாமுனிவன் சொற்படியே திருவத்திமாமலை வந்து சேர்ந்த கஜராஜன் வரதராஜனைக் கண்ணாரக் கண்டுகளித்து "நாடாதமலர் நாடி நாடோறும் நாரணன்தன், வாடாத மலரடிக்கீழ் வைக்கவே வகுக்கின்று" என்கிறபடியே தூய நன் மலர்களைக் கொண்டு தூவித் தொழுவதே தொழிலென்று துணிந்து, குவளை கமலம் முதலிய நன் மலர்களை நாடோறும் கொணர்ந்து நம் வரந்தரும் பெருமாளுடைய நாண்மலரடிக்கீழ்ப் பணிமாறிப் போது போக்கிவந்தனன். நித்யமும் பதினாலாயிரம் பங்கய மலர்களைக்கொண்டு பரிசரியை பண்ணுவதென்று பாவனமான விரதம்பூண்டு அங்ஙனமே தவறாது தொண்டு செய்து வருகையில், ஒருகால் வறட்கேடுமிக்குப் பொய்கைகளெல்லாம் உலர்ந்துபோய் ஓரிடத்திலும் ஒரு பூவும் கிடையாததாக, நெடுந்தூரம் தேடிக்கொண்டே செல்லுமளவில், த்ரிகூடமலையுச்சியில் ஒரு சிறந்த தாமரைத் தடாகம் உளதாக, அதனுடைய நறுமணத்தைக் கொய்துகொண்டு நன்மாருதம் வீச, அவ்வழியே பற்றிச்சென்று அப்பொய்கை சென்று சேர்ந்து கமல மலர்களைப் பறிக்கப் புகுந்த கஜராஜன், ஆங்கு நெடுங்காலமாய் உறைந்து வந்த முதலையின் வாயில் அகப்பட்டு அதுநீருக்கிழுக்க இவன் கரைக்கிழுக்க இங்ஙனஞ் செல்லுகையில் தன் முயற்சி பயன்படாமை கண்டு தளர்ந்து "நாராயணா ஓ! மணிவண்ணா! நாகணையாய்! வாராய் என்னாரிடரை நீக்காய்" என்று பெருமிடறு செய்து கூவியழைத்தனன்.

[வரதராஜன் கஜராஜனுக்கு அருள் புரிதல்.]

கஜேந்திரனுடைய கூக்குரல் செவிப்பட்டவாறே வரதராஜன் நிலை கலங்கிப் பறவையேறு பரம்புருடனாய் அரைகுலையத் தலைகுலையப் பதறியெழுந்தருளி அப்பொய்கைவாய்ச் சென்று சேர்ந்து கஜராஜன் கராங்கொளக் கலங்கியிருக்குமிருப்புக்கண்டு 'அந்தோ, என்னடியானை நீர்ப்புழுவின் வாயிலே துடிக்கவிட்டேனே!' என்று திருவுள்ளம் நொந்து திருவாழியை விட்டு முதலையைத் துணித்து, கஜராஜன் கொய்த கமல மலர்களைத் திருவடிகளிலே சேர்ப்பிக்கப்பெற்று அக்களிறரசனைக் கைகளால்தடவிக் களிப்பித்து 'பக்தசிகாமணி! க்ருதயுகத்திலே கமலாஸனன் செய்த திருவாராதனத்தினாற் போலே இந்த த்ரேதாயுகத்திலே உன்றன் குற்றேவலால் பேரவும் உவந்தேன்; இனி நீ நலமந்தமில்லதோர் நாடுபுக்கு நித்ய கைங்கரியம் செய்துகொண்டு நித்யானந்தசாலியாய் இருப்பாயாக' என்று அருள் விடை தந்து அத்திமாமலையுச்சியில் வந்தமர்ந்தனன்.

[இனி த்வாபரயுக-ஆராதனக்ரம முரைத்தல்.]

இங்ஙனம் பேரருளாளப் பெருமாளுடைய த்ரேதாயுகத் திருவாராதன விபவத்தை நாரதமுனிவர் சொல்லக்கேட்ட ப்ருகு மஹர்ஷியானவர், பின்னர் த்வாபரயுகத்தில் ப்ருஹஸ்பதி திருவாராதனம் செய்யுமாறு பாக்கியம்பெற்ற வரலாறு எங்ஙனேயென்று கேட்கையில், அதனையும் அம்முனிவர் தாமே சொல்லலுற்றனர்.

ப்ருஹஸ்பதியின் சாப வரலாறு.

காலடைவில் காஞ்சிபுரியானது கானனவளவில் தேவபிரான் திருமாமகளோடு கூட உலாவிக் கொண்டிருக்கையில், மஹர்ஷியின் சாபத்தினால் மண்ணுலகில்வந்து சேர்ந்து பாவம் தொலைவதற்காகத் திருவனந்த ஸரஸ்ஸின்கரையில் தவமியற்றிக்கொண்டிருந்த ப்ருஹஸ்பதியினால் காணப்பட்டு, 'யாரோவொரு ராஜகுமாரன் தன் மஹிஷியோடு இங்ஙனே உலாவுகின்றான் போலும்' என்று எண்ணின அந்த ப்ருஹஸ்பதியினால் "அரச குமாரனே!

புலி முதலிய கொடிய மிருகங்கள் மலிந்த இக்கானகத்தில் நீ இங்ஙனம் உலாவலாகாது" என்று சொல்லப்பட்டும் அதற்கு விடையொன்றும் கூறுமலும் ஸ்வஸ்வரூபத்தைக் காட்டாமலும் அந்த திவ்ய தம்பதிகள் ஸ்ரீஹஸ்தி சைல சிகரத்திற் புகுந்தருளினர். அந்த ப்ருஹஸ்பதிக்கு மஹர்ஷி சாபம் வந்த வழியைக் கேண்மின்:—விண்ணுலகில் தேவேந்திரன் ஒருநாள் தனது கொலுமண்டபத்தில் வீற்றிருந்து ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களில் தேர்ச்சி பெற்ற மஹர்ஷிகளைத் திரட்டிச்சேர்த்து அவர்களிடம் பலவகையான தருமங்களைப் பற்றிக் கேட்டான். பல பல கேள்விகளிடையில் இங்ஙனே ஒரு கேள்வி யுண்டாயிற்று; அதாவது "வேதங்களை ஓதுதல் ஓதுவித்தல், அதிதிகளை ஸத்கரித்தல்; பஞ்சகால பராயணர்களாய் பகவதாராதனம் முதலியவற்றில் ஊன்றியிருத்தல் ஆகிய இப்படிப்பட்ட வழிகளில் வழுவாது க்ருஹத்திலேயிருந்துகொண்டுவாழ்தல் நல்லதா? அல்லது, இங்ஙனம் க்ருஹத்தில் வாழ்வதை விட்டுத் தீயோம்புதல் முதலிய கருமங்களையும் விட்டு திவ்ய க்ஷேத்ர புண்ய தீர்த்தங்களில் அவகாஹிப்பதையே விரதமாகக்கொண்டு எப்போதும் திவ்யதேச ஸஞ்சாரங்கள் செய்து கொண்டிருப்பதே நல்லதா? இதை மஹர்ஷிகள் நன்கு ஆராய்ந்து விடை கூறவேணும்" என்று.

இங்ஙனம் தேவேந்திரனல் வினவப்பட்ட முனிவர்கள் ப்ருஹஸ்பதியை நோக்கி 'எமக்கெல்லார்க்கும் தலைவராய் மிகச்சிறந்தவரான நீரே இவ்வினவுக்கு விடையிறுப்பீராக' என்று கோரினர். இந்த வேண்டுகோளுக்கிணங்கிய ப்ருஹஸ்பதியானவர் "க்ருஹத்திலேயே யிருந்து தருமங்களை யனுட்டிப்பவன் தாழ்ந்தவன்; தீர்த்தயாத்திரையில் செல்பவனே மேம்பட்டவன்" என்று தேவகோஷ்டியில் நிர்த்தாரணையாகக் கூறினர்.

[முனிவர்களால் சபிக்கப்பட்ட ப்ருஹஸ்பதி மண்ணுலகில் வந்து பிறத்தல்]

இங்ஙனம் ப்ருஹஸ்பதி நிஷ்கர்ஷித்துக் கூறினதைக்கேட்ட முனிவர்கள் இது சாஸ்திர விருத்தமாகச் சொல்லப்பட்டதென்று கருதி, க்ருஹத்திலே யிருந்து சாஸ்த்ர விஹிதங்களான தருமங்களை யனுட்டித்துக்கொண்டு பரமைகாந்தியாய் வாழ்வதை இழிவாகக் கூறி ஊர் சுற்றுவதை உயர்வாகக் கூறின இந்த ப்ருஹஸ்பதியின் கொள்கை உலகிற் பரவுமாயின் தரும மார்க்கம் மிகவும் சிதைவுறும்; மஹாஸபையில் இங்ஙனம் தவறுதலாக முடிவுகூறின குற்றத்திற்குப் பயனாக இந்த ப்ருஹஸ்பதி மண்ணுலகில் ஒரு தரித்ரனுக்குப் புதல்வனாய்ப் பிறந்து கஷ்டங்களை யனுபவிக்குமாறு சாபம் பெறத்தக்கவன்" என்று கூறி அங்ஙனமே சாபமிட்டுப் போயினர்.

அந்த சாபத்தினல் தேசிழந்த ப்ருஹஸ்பதி விண்ணுலகில் நின்றும் நழுவி மண்ணுலகில் வீழ்ந்து ஒரு வறியனுடைய இல்லத்தில் அந்தண யோனியிற் பிறந்தனன். பிறந்ததும் தாய் தந்தையரை யிழந்து பலவகைக் கஷ்டங்களுக்கு ஆளாகிப் பசி தாகங்களினல் மிகவும் பீடிக்கப்பட்டுக் கண்டவிடமெங்கும் பல்லைக் காட்டியிரந்து திரிந்து ஒருவாறு உயிர்வாழ்ந்து வந்தான். நாளடைவில், கரிக்கட்டை போன்றவொரு காதலியை மணம் புணர்ந்தான். அவளிடத்திற் பல புத்திரர்களையும் பெற்றனன். குடும்பத்திலுண்டான ஏழைமைத் துயரம் எழுதற் பாலதன்று. ஒரு நொடிப்பொழுது கழிவது ஒரு யுகமாயிருந்தது. மழை காலத்தில் பிச்சை யெடுக்கப் புறப்படவும் முடியாதபடி மிக்க வருத்தத்திற்கு ஆளாயினன். குடும்பத்தோடு பல்வகைப் பிணிகளாலும் மெலிந்தனன்.

[இடையில் ஒரு நாயின் கதை.]

இப்படியிருக்கையில், சேனையுடன் கூடி வேட்டையாடிக்கொண்டிருக்க ஓர் அரசன் சற்றுப் போது இளைப்பாறுதற்பொருட்டு, இந்த வறியன் வஸிக்கும் கிராமத்திலே தன் மக்

களோடும் வந்து புகுந்தனன். இவ்வரசனது புதல்வனொருவன் மதம்பிடித்தவனாய் அங்குமிங்கும் திரிந்து கொண்டு சிறு விஷமங்களைச் செய்து கொண்டே வந்து ஒரு நாய்ப்பேடையின் குட்டிகளுள் ஒன்றைக் கொன்றிட்டனன். அதனால் கறுக்கொண்ட தாய்நாயானது அவ்வரச குமாரனைக் கணைக்கால்களில் கடித்திட்டது; அதனால் கோபங்கொண்ட ராஜபடர்கள் அந்த நாயை நலியத் துரத்திவந்தார்கள். அவர்களால் பின் தொடரப்பட்ட அந்த நாய் குட்டிகளோடுங் கூட ஓடிவந்து உயிர் தப்புதற்காக அந்த வறியனது மனையினுட் புகுந்திட்டது. அப்போது தான் படாத பாடுகள் பட்டுச் சிறிது அன்னத்தைச் சம்பாதித்துக் கொணர்ந்து உண்டுகொண்டிருந்த அந்த அந்தணன் தன் இல்லத்தினுட்புகுந்த அந்த நாயைக் கண்டு சினந்து தனது புதல்வர்களையும் சீறி உடனே அந்த நாயைவெளித்துரத்துமாறு கட்டளையிட்டனன். அவர்களும் தந்தையிட்ட கட்டளையின்படியே அந்நாயை வெளியில்துரத்திக் கதவடைத்தனர்.

பிறகு அந்த நாய் ஒரு ஸம்ஸ்காரவுணர்ச்சியினால் தனது முற்பிறப்பின் விருத்தாந்தத்தை ஸ்பரிக்கப்பெற்று "முன் சன்மத்தில் நான் சரணாகதரக்ஷணம் பண்ணாதது காரணமாகவே இந்த நாய்ப்பிறப்பைப் பெற்றேன்; அடா பாப்பனனே! எனக்கு நேர்ந்த கதியே உனக்கும் நேரப்போகிறது காண்" என்று சொல்லிக் குரைத்துக்கொண்டே செல்லுகையில், தேடிக்கொண்டிருந்த ராஜபடர்களின் கண்ணிற்பட்டுக் கொலையுண்டொழிந்தது.

இச்செய்தியையுணர்ந்த அவ்வந்தணன் சரணமடைந்த ஜந்துவை மரணமடைவித்த கொடும்பாதகத்திற்குப் பரிஹார வழி தெரியாதவனாய் மிகவும் பரிதபித்துத் தன் இல்லத்தினின்று வெளியேறிச்சென்று கங்கைக்கரை சேர்ந்தனன். அங்கு ஸமாதியிற்கிடந்த பரத்வாஜ முனிவரைக் கண்டு வணங்கித் தன்னுடைய பாவத்தைக் கூறிப் பரிஹாரவழி கேட்டனன்.

அவரும் அகக்கண்ணால் ஆராய்ந்து "கோதாவரி க்ருஷ்ணை முதலிய புண்ணிய நதிகளைக் கடந்து சென்று தொண்டைமண்டலத்தில் ஸத்ய விரத க்ஷேத்திரத்தில் ஹஸ்திகிரியின் அடியிலுள்ள திருவனந்த ஸரஸில் நீராடித் தவம்புரிந்து இப்பாவம் தொலையப் பெறுவாய் என்றுரைக்க, அவ்வரியபெரிய இனியமொழியைக்கேட்டு அந்தணன் அக மகிழ்ந்து அங்ஙனமே ஸத்யவிரத க்ஷேத்திரத்தை யடைந்து புண்ணியகோடி விமானத்தைச் சேவித்துப் பேருளாளனைச் சிந்தை செய்துகொண்டே திருவனந்தப் பொய்கைக்கரையில் தவமியற்றி வந்தனன்.

கிருதயுகத்தில் பிரமனாலும், திரேதாயுகத்தில் கஜேந்திரனாலும் ஆராதிக்கப் பெற்ற தேவாதிராஜன் த்வாபரயுகத்தில் ப்ருஹஸ்பதியினால் ஆராதிக்கப் பெறத் திருவுள்ளம்பற்றி, அந்த அந்தணனாகப் பிறந்திருக்கின்ற ப்ருஹஸ்பதியினுட் புகுந்து மிகச்சிறந்த தபஸ்ஸை அனுட்டிப்பித்தனன். அவன் இங்ஙனம் தவம் புரிந்து கொண்டிருக்க;

சுவர்க்கலோகத்தில் மிகக் கொடிய தேவாசுர யுத்தம் நிகழ, அப்போரில் அசுரர்களிடம் பங்கமடைந்த அமரர்கள் பிரமனிடம் வந்து ‘எங்களுக்கு இப்படிப் பரிபவம் நேரிடக் காரணமென்கொல்?’ என்று கேட்க, அதற்கு நான்முகக் கடவுள் கூறியதாவது— "உங்களுடைய புரோஹிதரான ப்ருஹஸ்பதியானவர் முனிவர்களின் சாபத்தினால் விண்ணுலகையிழந்து மண்ணுலகெய்தியதனால் உங்கட்குப் பரிபவம் நேர்ந்திட்டது; புரோஹிதரற்ற கூட்டத்திற்குக் கேடு விளைவது வியப்பன்றே: அவரை இங்குக்கொணர்ந்து சேர்த்துக்

கொண்டால் குறையொன்றுமில்லையாகும்; அதற்குற்ற உபாயமும் உரைக்கின்றேன் கேண்மின் ; சித்திரை மாதத்துப் பௌர்ணமாஸியன்று வழக்கப்படி நான் வரதராஜனை ஸேவிக்கப் போம்போது நீங்களும் என்னுடன் கூட வாருங்கள்; வந்து வரதராஜனை இறைஞ்சியேத்தி இரந்து ப்ருஹஸ்பதியின் பாவங்களைப் போக்குவித்துப் பழையபடி புரோஹிதபதவியில் அவரைப் பிரதிஷ்டாபனம் செய்யலாம்" என்று.

அப்படியே தேவர்கள் நான்முகனோடு கூடக் கச்சிநகரேற வந்து பேரருளாளப் பெருமானை வணங்கி "ப்ருஹஸ்பதிக்கு நேர்ந்திருக்கின்ற மஹர்ஷி சாபமும் சரணாகதபரித்யாக பாதகமும் தொலையுமாறு அருள் புரியவேணும்" என்று பிரார்த்தித்தனர்.

அந்த பிரார்த்தனைக்கு இணங்கிய பேரருளாளன் ப்ருஹஸ்பதி பக்கலில் பரிபூர்ண கடாக்ஷ அமிருத தாரைகளைப் பெருக்கியருள, அதனால் மானிட வுடல் நீத்து திவ்ய சரீரம் பெற்ற ப்ருஹஸ்பதியானவர் திருவத்தி மாமலை நாதனைத் தொழுதேத்தி "ஸ்வாமிந்! கிருத யுகத்தில் நான்முகனிடத்தும், த்ரேதாயுகத்தில் கஜேந்திரனிடத்தும் திருவாராதனம் கொண்டருளினதுபோல இந்த த்வாபரயுகத்தில் அடியேன் பக்கலில் திருவாராதனம் கொண்டருள வேணும்" என்று கைகூப்பி வேண்டினர்.

அவ்வேண்டுகோளுக்குத் திருவுள்ள மிரங்கி தேவாதிராஜன் 'அங்ஙனமேயாகுக' என்று சோதிவாய் திறந்து பணிக்க, பிரமனுள்ளிட்ட அமரர்கள் அகமகிழ்ந்து தமது உலகம் மீண்டு சென்றனர். ப்ருஹஸ்பதி சிரத்தையோடும் பக்தியோடும் வரதராஜனுக்குத் திருவாராதனம் நடத்திவருகையில் மண்ணுலகம் வளம் மிக்கது; விண்ணுலகமும் அரக்கராசுரர் போல்வாருடைய நலிவு தீர்ந்து இன்பமெய்தியது.

அப்போது அயோத்தி மன்னவர்களுள் ஒருவனான குசத்வஜனென்னுமரசன் மகப்பேறு பெறுதற்குப் பல விரதங்கள் அநுட்டித்தும் பேறு பெறாதவனாய் வியாஸமுனியின் நியமனத்தின்படியே வந்து தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப் பூண்ட வன்பாளனாய் தேவபிரானது கடாக்ஷத்தினால் விசுவஜித்தென்னும் ஒரு புதல்வனைப் பெற்றனன். அவன் நாளிடையில் பொருந்திய தேசும் பொறையும் திறனும் புகழும் பெற்று விளங்கிக் காஞ்சிபுரியை மஹாநகரமாக நிருமித்தனன். அவனது பரம்பரையில் தோன்றின மன்னவர்களும் தேவப்பெருமானுடைய திருவடிகளில் அன்பு பூண்டு தொண்டு பூண்டு த்வாபரயுக முடிவளவும் மிகச் சிறந்து விளங்கி வந்தார்கள்.

த்வாபரயுக முடிவில் தேவபிரான் ப்ருஹஸ்பதியை நோக்கி 'உனது திருவாராதனத்தினால் மிக மகிழ்ந்தேன் ; இனிக் கலியுகம் தொடக்கமாவதால் இந்த யுகத்தில் ஆதிசேஷன் என்னை ஆராதிக்கக்கடவன்; நீ உனது இருப்பிடம் சென்று சேருவாயாக' என்று கட்டளையிட, அவ்வண்ணமே ப்ருஹஸ்பதி தன் இருப்பிடம் சென்று சேர்ந்தனன்.

பிறகு திருவனந்தாழ்வான் தேவப்பெருமானை வெகு சிரத்தையுடன் ஆராதிக்கும் பாக்யம் பெற்றனன். இன்னமும் அவ்வாதிசேஷனாலேயே தேவப் பெருமான் ஆராதிக்கப் பெற்றுப் பெருந்தேவித் தாயாரோடு பக்தவர்க்கங்களை அநுக்ரஹித்துக்கொண்டு நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்கள் முதலியவற்றைக் குறையற அநுபவித்துக் கொண்டு காஞ்சிமா நகரைப் பரமபதத்திற் காட்டிலும் பாங்குடையதாக ஆக்கிக் கொண்டு அற்புதமாகக் காட்சி தந்தருளாநின்றான்.

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.